4. கவன ஈர்ப்பு

கல்லூரி பள்ளிப் பாடப் புத்தகங்கள் அச்சிட்டு வழங்குவதில் ஏற்பட்ட கால தாமதம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எஸ். சிவசாமி ஆகியோர் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, " கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்குப் பாட நூல்களை அச்சிட்டு வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தால் அவர்கள் அடைந்துள்ள இடர்பாடுகள் குறித்து" மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டையும் சேர்த்துப் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் நாட்டுடைமை ஆக்கப் பெற்ற பாட நூல்களை வெளியிட்டு வருகிறது. 1-2-1976-ல் தமிழ்நாட்டில் குடியரசு ஆட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு, பாட நூல் நிறுவனம் வெளியிட்ட புத்தகங்களை ஆய்வு செய்வதற்காக (நால்வர் கொண்ட) ஒரு குழுவை அரசு 20-3-1976-இல் நியமித்தது. இக்குழு பாடநூல்களைப் பரிசீலித்து நாட்டுப்பற்று, ஒருமைப்பாடு ஆகியவற்றை பாட நூல்களில் சேர்க்கவும், சில பகுதிகளை நூல்களில் இருந்து நீக்கவும் அறிக்கை அளித்தது. இந்த அறிக்கையில் அடிப்படையில், புதிய பாடங்களை நூல்களில் சேர்ப்பதற்காக பள்ளி கல்வி இயக்குநர் தலைமையில் 12-11-1976-இல் அரசு சில குழுக்களை நியமித்தது.

2. குழுக்களின் கருத்துக்களை எல்லாம் ஆய்ந்து எந்தெந்த பாடங்களை சேர்க்க வேண்டும்; எந்தெந்த பாடங்களை நீக்க வேண்டும் என்று அரசு 24-2-1977-இல் ஆணை பிறப்பித்தது. இதற்குப் பிறகும் 11-4-1977-இல் சில மாற்றங்கள் செய்ய அரசு ஆணை பிறப்பித்தது. இந்த ஆணைகளுக்கு ஏற்ப தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் நூல்களை அச்சிட்டு இவ்வாண்டு பள்ளிகளுக்கு வழங்கியுள்ளது. சென்னையிலும், சிவகாசியிலும் உள்ள அச்சகங்களுக்கு பதிப்பு வேலைகளை வழங்கி பள்ளிகள் திறப்பதற்கு முன்பு பாட நூல்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப் பட்டது. சென்ற ஆண்டு இருந்ததைப் பேல பாாட நூல்களை விற்பனை செய்ய கூட்டுறவு நிறுவனங்களை (மொத்த வியாபாரி களாகவும் சில்லறை வியாபாரிகளாகவும்) அரசு நியமித்துள்ளது.

3. பாட நூல்கள் 30-5-1977 முதல் வெளியூர்களிலும், 6-7-1977 முதல் சென்னையிலும் விற்பனையாகி வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரை பாட நூல் நிறுவனம் சில்லறை வியாபாரிகள் மூலம் விற்பனை செய்து வருகிறது. இது வரை வெளியூர்களுக்கும் சென்னைக்கும் அனுப்பப்பட்ட நூல்களின் மொத்த எண்ணிக்கை $2\frac{1}{4}$ கோடியாகும். அவைகளின் மதிப்பு ரூபாய் மூன்று கோடியே நாற்பது லட்சத்திற்கும் மேலாகும். இவ்வளவு நூல்கள் அனுப்பிய பிறகும், ஒரு சில இடங்களில் புத்தகங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு உள்ளது. ஏனெனில் பழங்குடி மக்கள், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு அரசு இந்த ஆண்டு முதல் படிப்பு உதவித் தொகையை பள்ளிக்குச் செலுத்த வேண்டிய தொகை போக மீதமுள்ள பணத்திற்குப் பாட நூல்களாகக் கொடுக்க வேண்டும் என்று 23-3-1977 இல் சமூக நலத்துறையில் ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய நூல்கள் என்னென்ன என்பதை 28-4-1977 இல் அரசு தெளிவு படுத்தியுள்ளது. இந்த ஆண்டு உதவித் தொகையை புத்தகங்களாக வழங்குவதாலும் இதற்கென்று தனியாக மனுச் செய்து சான்றிதழ் பெறுவதிலும் மாணவர்களுக்கு சில தொல்லைகள் ஏற்பட்டுள்ளன. இந்த உதவித் தொகைக்கு அருகதை உள்ள எல்லா மாணவர்களுக்கும் நூல்கள் கிடைக்கச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான பட்டியல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து பெற்று பாட நூல்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் புத்தகங்களின் தேவையும் அதிகமாகி உள்ளது. அதிகப்படித் தேவையான பாட நூல்களையும் அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

4. கல்லூரிகளுக்குத் தேவையான எல்லா நூல்களையும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடவில்லை. ரூபாய் ஒரு கோடி திட்டத்தின் கீழ் மைய அரசு வழங்கும் மானியத் தொகையைப் பெற்று பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் பயன்படும் சில நூல்களை மட்டும் பாடநூல் நிறுவனம் தமிழில் வெளியிட்டு வருகிறது. கல்லூரிப் பாட நூல்கள் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைக்குப் பதிலாக, நூல்களாகவே வழங்கப்பட்டு வருகிறது. இந்நூல்கள் கல்லூரி மாணவர்கள் கல்லூரியில் சேரும் கடைசி நாளான 31-7-1977க்குப் பிறகு கல்லூரி முதல்வர்களிடம் இருந்து பட்டியல் பெறப்பட்டு அளிக்கப்பட்டு வருகின்றது. மற்ற கல்லூரி நூல்களை பல்கலைக் கழகங்களும், தனியார் நிறுவனங்களும் அசிட்டு வெளியிடுகின்றன.

5. பாடநூல்களைத் தயாரிக்க மத்திய அரசு மலிவு விலையில் காகிதம் தந்து உதவுகிறது. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய காலாண்டுக்கு உரிய மலிவு விலைக் காகிதம், காகித ஆணையில்

இருந்து குறிப்பிட்ட காலத்தில் வந்து சேரவில்லை. இதுவும் பாட நூல்கள் வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு ஒரு காரணமாகும்.

6. கன்னியாகுமரி மாவட்டத்தில் பாட நூல்கள் மாண வர்களுக்குக் கிடைக்கவில்லை என்று திருவாளர்கள் ஜே.ஜேம்ஸ் எம். எல். ஏ., வில்சன் அப்போலஸ், எம். எல். சி., ஆகிய இரு வரும் தந்தி மூலமாகவும், கடித மூலமாகவும், அரசுக்குத் தெரிவித்தார்கள். பாட நூல் நிறுவனத்திடம் இது பற்றி அறிக்கை பெறப்பட்டது. இந்த அறிக்கையிலிருந்து கன்னியா குமரி மாவட்டத்திற்கு 5–7–1977 வரை ரூ. ஒன்பது லட்சத்து 63 ஆயிரத்து 419·45 மதிப்புள்ள பாட நூல்கள் அனுப்பப் பட்டுள்ளன என்று தெரிய வருகிறது. சென்ற ஆண்டு முழு வதும் இந்த மாவட்டத்தில் விற்பனையான நூல்களின் மதிப்பு ரூ. 8 லட்சத்து 36 ஆயிரத்து 306.24 தான். மேற்படி உறுப் பினர்களுக்கு இது சம்பந்தமாக விபரமான பதில் 13–7–1977 அன்று அனுப்பப்பட்டு உள்ளது.

3. வினாக்கள்—விடைகள் (தொடர்ச்சி)

பள்ளிப் பாட புத்தகங்கள்

*3 குறுகிய கால வினா:—திரு. சோ. அழகர்சாமி: மாண்பு மிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பள்ளிக்கூடங்கள் திறந்து வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம், எனில், காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ & இ):— பாட நூல்களைப் பரிசீலித்து நாட்டுப்பற்று, ஒருமைப்பாடு, முதலியவற்றை நூல்களில் சேர்க்கும் பொருட்டு, அரசு நியமித்த குழுக்களின் பரிந்துரைகள் மீது, 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் பிறகு தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் நூல்களை அச்சிடும் பணியை மேற் கொண்டது. மலிவு விலையில் அச்சிடும் தாள் உரிய காலத்தில் காகித ஆலையிலிருந்து வந்து சேரவில்லை. எனவே மொத்த விற் பனையாளர்களாகிய தாலுக்கா கூட்டுறவு பண்டக சாலைகளுக்கு நூல்களை அனுப்புவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டது.